## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தேதி ( 10.02.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1., நாள் : 19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் படி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.1755 நாள்: 13.12.2017–ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் தொடர்பாக கடந்த 12.01.2018–ம் தேதி வரை ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 20 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலகத்தில் 08.02.2018 அன்று நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளில் கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்நதால் 19 நிராகரிக்கப்பட்டது, 1 ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசஙகள் உறுப்பினர், செயலர், மறுவரையறை ஆணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள் : 31.01.2018–ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின் படி தயார் செய்யப்பட்டுள்ளது. குளச்சல் நகராட்சியின் 24 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு மாநில வரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க அங்கீகாரத்திற்காக.

ந.க.எண்.1834/2017/அ1

**தீர்மானம் எண்.1785 அங்கீகரிக்கப்பட்டது.**

ஆணையர்/தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணகூட்டம் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தேதி ( 28.02.2018) புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரஙகில் வைத்து நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3022/2017 நாள்: 22/01/2018–ன் படி, இந்நகராட்சிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2017–18–ன் கீழ், ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில், குளச்சல் பேருந்து நிலையப்பகுதியில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் அமைத்தல் ( RO Plant) பணிக்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.742/2017/இ1

**தீர்மானம் எண்.1786 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ வாகனம் எண். TN-75-P-8399–க்கு தகுதி சான்று புதுப்பிப்பதற்கான கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.35000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பணிகள் விவரம் கீழ்வருமாறு**

1. இஞ்சின் ஆயில் மாற்றுதல்
2. கூலண்ட் ஆயில் மாற்றுதல்
3. பிரேக் ஆயில் மாற்றுதல்
4. ஏல் பில்டர் மாற்றுதல்
5. டீசல் பில்டர் மாற்றுதல்
6. ஆயில் பில்டர் மாற்றுதல்
7. இஞ்சின் பெட் ரப்பர் மாற்றுதல்
8. இஞ்சின் பெட் பிராக்கெட் மாற்றுதல்
9. சைலன்சர் பேக்கிங மாற்றுதல்
10. பெயிண்டிங அடித்தல்
11. ஸ்டிக்கர் ரைட்டிங ஒர்க்
12. சீட் ஒர்க்
13. ப்ளைபீல் டிஸ்க் மாற்றுதல்
14. வெல்டிங செய்தல்

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.1787 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி லாறி வாகனம் எண்.TN-74-T-5508—க்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.73000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பணிகள் விவரம் கீழ்வருமாறு**

1. சர்வீஸ் மற்றும் கிரீஸ் அடித்தல்
2. பம்பு பழுது பார்த்தல்
3. பாடி, கேபின் பேச் ஒர்க் செய்தல்
4. டிப்பர் ஜாக்கி ஆயில் லீக் சரி செய்தல்
5. எலக்டிரிக் செக்கப்
6. முழு பெயின்ட் அடித்தல்
7. டிப்பர் ஆயில் நிரப்புதல்
8. கியர் ஆயில் லெவல் செய்தல்
9. கிளட்ச் அசம்பிளி மாற்றுதல் மேலும் சில இதர பணிகள் செய்தல்

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.1788 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் 2015—16—ம் ஆண்டில் மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொடர்பான விவரஙகளை Online—ல் பதிவு செய்யும் பணியானது JACOB & JACOB மார்த்தாண்டம் நிறுவனம் வழியாக மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி பணிக்கான பட்டியல் தொகை ரூ.4000/—ஐ வழஙக கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.எனவே மேற்படி தொகையினை வழஙக மன்ற அனமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7714/2008/சி1

**தீர்மானம் எண்.1789 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN/74Z-5304 —ல் மின்கலம் பழுதடைந்ததால் வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டது. குடிநீர் வினியோகம் பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, பழுதடைந்த மின் கலத்திற்கு மாற்றாக புதிய மின்கலம் பொருத்தும் பணியினை நகராட்சி சட்ட பிரிவு 15—ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.7800/—ஐ, குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து வழஙகப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

**தீர்மானம் எண்.1790 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்யப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் உள்ள 3'',5'',6'' சுவிஸ் வால்வுகள் மற்றும் குடிநீர் வினியோக சுவிஸ் வால்வுகள் ஆகியவற்றில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு அசுத்த நீர் நல்ல நீருடன் கலக்கும் நிலை ஏற்பட்டதை தடுக்கும் பொருட்டும், குடிநீர் வீணாவதை தடுக்கும் பொருட்டும், அனைத்து வால்வுகளிலும் ரோப் வைக்கவும், நகராட்சி அலுவலக வளாகத்தில் வால்வு மேல் மூடி (Valve square shaft ) உடைந்துள்ளதை வெல்டிங செய்து சரி செய்வதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.70,000/—தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி, மேற்படி பணியினை நகராட்சி சட்ட விதி 15—ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.64780/—ஐ நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் வழஙகியுள்ள விவரம் மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1841/2017/இ2

**தீர்மானம் எண்.1791 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

இந்நகராட்சியில் 26.01.2018 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சிக்காக புதிய மூவர்ணக்கொடி வாஙகியது தோரணஙகள், மைக்செட் மற்றும் இதர செலவுத் தொகை ரூ.2608/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1829/2015/எச்1

**தீர்மானம் எண்.1792 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடைகள், கண்ணதாசன் வணிக வளாக கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள் மற்றும் சொர்ண ஜெயந்தி கடைகளில், வாடகைக்கு விடப்பட்டு 9 ஆண்டுகளுக்கு மேலான கடைகளுக்கும், பொது ஏலம் நடத்துவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1771 நாள் : 27.12.2017—ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் 06.02.2018 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. மேற்படி மன்ற தீர்மானத்தின் தொடர்ச்சியாக கீழ்காணும் கடைகளையும் பொது ஏலத்தில் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொது ஏலத்திற்கு விடப்படவேண்டிய கடைகள் விவரம் :

| வ.எண் | குத்தகை விவரம் | கடை எண் | டேவணித் தொகை ( ரூ.) |
|---|---|---|---|
| 1 | கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள் | 15,18,19,31,38,39,40,41,42, 43,54,55,56,57,58,59 – (2—வது அழைப்பு)<br>ஆவின் பாலகம் – (முதல் அழைப்பு) | 1,00,000/— |

| | | | |
|---|---|---|---|
| 2 | காமராஜர் பேருந்து நிலைய கடைகள் | 7,9,11,12,13,14,15,17 முதல் 28 வரை மற்றும் 31,36,37,38 – (2–வது அழைப்பு)<br>காதிகிராப்ட் முன்புற காலியிட கடை – (2–வது அழைப்பு) | 1,00,000/– |
| 3 | சொர்ண ஜெயந்தி கடைகள் | 2 (பழைய கடை எண்.37 – (2–வது அழைப்பு) | 1,00,000/– |
| 4 | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ளதரை பாகை கடைகள் | 1 முதல் 18 வரை மற்றும்<br>மட்டன் ஸ்டால் 1 முதல் 6 வரை (குனித்தனியாக) – முதல் அழைப்பு | 1,00,000/– |
| 5 | நவீன மீன்சந்தை தரை தளக் கடை மறு ஏலம் | 4 (2 – வது அழைப்பு) | 1,00,000/– |

மேலும் நகர்மன்ற தீர்மானம் 1771 –ன் படி, பொது ஏலத்திற்கு விடப்படும் கடைகளுக்கு ரூ.2,00,000/– டேவணித் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி டேவணித் தொகை அதிகபட்சம் என்பதால் கடைகளை ஏலத்திற்கு எடுக்க பலரும் தயஙகிய நிலையில், நிர்வாக நலனை கருத்தில் கொண்டு டேவணித் தொகையை ரூ.1,00,000/– மாக மறு நிர்ணயம் செய்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1793 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் 200 KVA Genset Room–ல் உள்ள மின் அளவுமானி பழுதடைந்ததால் ( மின் இணைப்பு எண் : 172002758) மேற்கண்ட மின் அளவு காட்டும் கருவியை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.1422/–ஐ செலுத்த இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின் வாரியம் குளச்சல் அவர்களின் கடிதம் அ.எண்.294/18, நாள் : 14.02.2018–ன் படி கோரப்பட்டது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை ரூ.1422/– ஐ குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1764/2009/இ2

**தீர்மானம் எண்.1794 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13277/2017, நாள் : 18.12.2017–ன் படி, இந்நகராட்சி குடிநீர் வினியோக மண்டல வரைபடம் (Zonation Map) தயாரித்து அனுப்ப தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மண்டல வரைபடம் (Zonation Map) தயாரித்த வகையில் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை ரூ.9560/–ஐ குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2053/2053/இ2

**தீர்மானம் எண்.1795 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன்சந்தை ஸ்டால், பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம், காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம், அண்ணாசிலை சமீபம் கட்டணம் கழிப்பிடம், இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பொட்டல் சாலையோர தென்னை மரம், நகராட்சி அலுவலகத்தில் உள்ள தென்னைமரம் மேல் ஆதாயம் (மகசூல்) அனுபவிக்கும் உரிமம் ஆகியவற்றிற்கு 2018–19 முதல் 2020–2021 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை இனஙகளை ஒப்பந்த ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11062/2015/அ1

**தீர்மானம் எண்.1796 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.12

இந்நகராட்சி பொறியில் பிரிவில் குடிநீர் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான 4 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 2017–18–ம் ஆண்டு பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.4,40,000–க்கு மன்ற ஒப்புதல் பெற்று பணிக்கு அமர்த்தப்பட்டு, ஓராண்டு அனுமதி காலம் 31.03.2018 –வுடன் முடிவடைவதால், குடிநீர் பணிகளின் மேற்படி பணியாளர்களின் அவசியம் கருதி, 2017–18–ம் ஆண்டிற்கு பொதுப்பணித்துறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 356 நாட்களுக்கு (ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை) 4 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்காகவும் உத்தேச செலவு தொகை ரூ.5,50,000/–க்கும், மேற்படி செலவினத்தை குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.245/2018/இ1

**தீர்மானம் எண்.1797 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

இந்நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 06.02.2018–ல் பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட செலவினஙகள் பின்வருமாறு,

| வ.எண் | மாதம் | செலவினம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 2018 | தினமலர் நாளிதழ் விளம்பரம் (26712 + 13356) | 40068/– |
| 2 | ஜனவரி 2018 | பிளக்ஸ் (6 * 600) | 3600/– |
| 3 | பிப்ரவரி 2018 | சுவாமியான துணிப்பந்தல் (ம) செயர் | 8000/– |
| 4 | பிப்ரவரி 2018 | வீடியோ மற்றும் ஸ்கிரீன் புரஜெக்டர் | 9000/– |
| 5 | பிப்ரவரி 2018 | கடைகளுக்கு வரிசை எண் ஸ்டிக்கர் | 2300/– |
| 6 | பிப்ரவரி 2018 | சவுண்ட்ஸ | 1500/– |
| 7 | பிப்ரவரி 2018 | ரெஜிஸ்டர், பைல், ரேப்பர் | 1550/– |
| 8 | பிப்ரவரி 2018 | கடைகளின் ஆல்பம் | 740/– |

மேற்படி கடைகளுக்கான செலவினஙகளை வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1798 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

இந்நகராட்சியில் குளச்சல் 'B' கிராமம் புல எண்.A1-29/2-ல் உள்ள 8498/28 சதுரமீட்டர் பரப்பில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவின் 38 மனைகள் உரிய நிபந்தனைகளுடன் கீழ்க்கண்டாவறு கட்டணம் வசூல் செய்து விட்டு வரன்முறைப்படுத்துவதற்கு ஊரமைப்புத்துணை இயக்குநர்(பொ) திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.4180/2017 திலிம3 நாள்: 16.02.2018—ன் படி ஒப்புதலளிக்கப்பட்டது.

1. கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூ.500/— வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக் கொண்டு வரன்முறைப்படுத்த வேண்டும்.
2. வரன்முறைக்கட்டணமாக அந்தந்த மனைகளுக்கான பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.60/— வீதம் அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.
3. வளர்ச்சிக் கட்டணமாக ( Development Charges ) அந்தந்த மனைகளுக்காக பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.150/— வீதம் மனுதாரரிடமிருந்து வசூல் செய்து தனிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

மேலும் மேற்படி மனைகளில் மனை எண்.1—ல் 161.87 சதுர மீட்டர் இடமும், மனை எண்.31—ல் 114.44 சதுரமீட்டர் இடமும் பொது பயன்பாட்டிற்கு வேண்டி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மேற்படி விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.236/2018/TPI

தீர்மானம் எண்.1799 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தின் மேற்கு திசையில் பேருந்துகள் உள்ளே செல்கின்ற சாலையில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக தனியார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பேருந்து நிலையத்திற்குள் பேருந்து உள்ளே நுழைவதில் சிரமம் ஏற்படுகின்றது. இது குறித்து பல்வேறு புகார் மனுக்கள் வரப்பெற்றுள்ளது.

இச்சாலையில் தனியார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர்களின் வியாபரம் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுவதாகவும் புகார்கள்வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தனியார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தின் மேற்கு பக்கத்திலுள்ள நகராட்சி சாலையை 'No Parking Area' என அறிவிப்பு செய்வதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.118/2018/TPI

தீர்மானம் எண்.1800 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.16

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 38 கடைகளுக்கும், சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 4 கடைகளுக்கும் கடந்த 06.02.2018 அன்று பொது ஏலம் நடத்தப்பட்ட போது, கடை எண் இடப்பட்டதில், சில தவறுகள் ஏற்பட்டுள்ளதால், ஏற்கனவே இடப்பட்டுள்ள எண்ணை ரத்து செய்துவிட்டு கீழ்காணும் விவரப்படி புதிதாக கடை எண் இடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

காமராஜர் பேருந்து நிலைய கடைகள்

| வ.எண் | பழைய வரிவிதிப்பு எண் | புதிய வரிவிதிப்பு எண் | பழைய எண் | புதிய எண் |
|---|---|---|---|---|
| 1 | 148/2005001 | 2018001 | 1 | 1 |
| 2 | 148/2005002 | 2018002 | 2 | 2 |
| 3 | 148/2005003 | 2018003 | 3 | 3 |
| 4 | 148/2005004 | 2018004 | 4 | 4 |
| 5 | 148/2005005 | 2018005 | 5 | 5 |
| 6 | 148/2005006 | 2018006 | 6 | 6 |
| 7 | 148/2005007 | 2018008 | 7 | 8 |
| 8 | 148/2005008 | 2018009 | 8 | 9 |
| 9 | 148/2005009 | 2018035 | 9 | 35 |
| 10 | 148/2005010 | 2018034 | 10 | 34 |
| 11 | 148/2005011 | 2018033 | 11 | 33 |
| 12 | 148/2005012 | 2018032 | 12 | 32 |
| 13 | 148/2005013 | 2018031 | 13 | 31 |
| 14 | 148/2005014 | 2018030 | 14 | 30 |
| 15 | 148/2005015 | 2018029 | 15 | 29 |
| 16 | 148/2005016 | 2018028 | 16 | 28 |
| 17 | 148/2005017 | 2018010 | 17 | 10 |
| 18 | 148/2005018 | 2017014 | 18 | 14 |
| 19 | 148/2005019 | 2018015 | 19 | 15 |
| 20 | 148/2005020 | 2018016 | 20 | 16 |
| 21 | 148/2005021 | 2018017 | 21 | 17 |
| 22 | 148/2005022 | 2018018 | 22 | 18 |
| 23 | 148/2005023 | 2018025 | 23 | 25 |
| 24 | 148/2005024 | 2018024 | 24 | 24 |
| 25 | 148/2005025 | 2018023 | 25 | 23 |
| 26 | 148/2005026 | 2018022 | 26 | 22 |
| 27 | 148/2005027 | 2018021 | 27 | 21 |
| 28 | 148/2005028 | 2018020 | 28 | 20 |
| 29 | 148/2005029 | 2018019 | 29 | 19 |
| 30 | 148/2005030 | 2018007 | 30 | 7 |
| 31 | 148/2005031 | 2018038 | 31 | 38 |
| 32 | 148/2006005 | 2018036 | 32 | 36 |
| 33 | 148/2006006 | 2018037 | 33 | 37 |
| 34 | 148/2007006 | 2018011 | 34 | 11 |
| 35 | 148/2007007 | 2018012 | 35 | 12 |
| 36 | 148/2007008 | 2018013 | 36 | 13 |
| 37 | 148/2007009 | 2018026 | 37 | 26 |
| 38 | 148/2007010 | 2018027 | 38 | 27 |
| | | சொர்ண ஜெயந்தி கடைகள் | | |
| 39 | 148/2005033 | 2018154 | 33 | 4 |
| 40 | 148/2005034 | 2018153 | 34 | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | 148/2005035 | 2018151 | 35 | 1 |
| 42 | 148/2005036 | 2018152 | 36 | 2 |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1801  அங்கீகரிக்கப்பட்டது.**

ஆணையர்/தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி